# மிருதங்க அரங்கேற்றம்



செல்வன்

ருக்மிணிகாந்தன் சாரங்கன்

30.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு.நல்லை.க.கண்ணதாஸ்** அவர்களின் சீடனும்,

திரு.சி.ஞானப்பிரகாசம் அப்பாலை அண்ணாவியார் அவர்களின் பூட்டனும்,

வேய்ங்குழல் வித்துவான் திரு.ஜி.எஸ் வசந்த குலசிங்கம் அவர்களின் பேரனும்,

யாழ் இந்துக்கல்லூரி மாணவனும்,

யாழ் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய மாணவனும்,

திரு.திருமதி வ. ருக்மிணிகாந்தன் நகுலேஸ்வரி தம்பதியினரின் புதல்வனுமான,

## செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன்

அவர்களின்

# மிருதங்க அரங்கேற்றம்

தலைவர்
**செந்தமிழ்ச் சொல்லருவி திரு.ச.லலீசன்**
பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

பிரதம விருந்தினர்
**திரு.ஐ.தயானந்தராஜா**
அதிபர், யாழ்.இந்துக்கல்லூரி

சிறப்பு விருந்தினர்கள்
**கலாபூஷணம், இசைத்தென்றல் திரு.ம.யேசுதாசன்**
இசைத்துறைப் பொறுப்பாளர், திருமறைக்கலாமன்றம்

**தண்ணுமை வேந்தன் திரு. மா. சிதம்பரநாதன்**
முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

**திரு.எம்.ஆர். ராஜ்மோகன்**
MSc, M.A, L.L.M, L.L.B (Hons London, FICS (UK)
சட்டத்தரணி, சிரேஷ்ட சுங்கப்பணிப்பாளர்

மதிப்பீட்டுரை
**திருமதி.சுகன்யா அரவிந்தன்**
விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்
**திரு. ஜி.வி.இராதாகிருஷ்ணன்**
ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர், தீவகம்.

**இடம்:-** இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி, கலை அரங்கம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபரம்பரை

## சங்கீதபூஷணம் சிதம்பரம் திரு.A.S.இராமநாதன்



தமிழ்நாடு சிதம்பரத்தில் பிறந்தவரான இவர், எமது ஈழத்து மிருதங்க வரலாற்றின் மூலவேர் என்றால் அது மிகையன்று. இன்று ஈழத்தினது முன்னணி வித்துவான்களும், அவர்கள் தம் வாரிசுகளும், அவ்வழி வந்தவர்கள் அனைவருமே இவரின் கலைவழி வாரிசுகளே. தமிழ் நாட்டிலிருந்து இலங்கை வந்து மிக நீண்ட காலமாக யாழ். பல்கலைக் கழகத்தில் மிருதங்கம் கற்பித்தல் பணியில் ஈடுபட்டு மிக நீண்டதொரு மாணவப் பரம்பரையை உருவாக்கி இசைத்துறைக்கும், நடனத் துறைக்கும் அருந்தொண்டாற்றியவர். 1980களின் இறுதிப் பகுதியில் இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மிருதங்க விரிவுரையாளராக இருந்தவேளை தமிழ்நாடு சென்ற நல்லை க.கண்ணதாஸ் இவரிடம் ஒரு வருடத்திற்கும் மேலாக விஷேட மிருதங்கப் பயிற்சியைப் பெற்றிருந்தார்.

## தண்ணுமை வேந்தன் திரு.மா.சிதம்பரநாதன்



ஆற்றுகைத்திறன், அறிமுறைத்திறன், கலைப்பண்பு என ஒரு கலைஞனுக்குத் தேவையான அத்தனை திறன்களும் நிறைந்த ஆசான் இவர். திரு. A.S இராமநாதன் அவர்களின் முதன்நிலை மாண-வர்களில் ஒருவர். நிறைந்த மாணவப் பரம்பரைக்குச் சொந்தக் காரர். ஈழத்திலும், வெளிநாடுகளிலும் இவரது மாணவர்கள் மிருதங்கத் துறையில் சாதனை படைத்துக் கொண்டு இருக்கிறார்கள். நீண்ட காலமாக யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் மிருதங்க விரிவுரையாளராகப் பணிபுரிந்து கலைப் பணியாற்றியுள்ளார்.

## குரு நல்லை க.கண்ணதாஸ்



தண்ணுமை வேந்தன் திரு.மா.சிதம்பரநாதன் அவர்களின் முதன் நிலை மாணவர்களின் ஒருவரான நல்லை க.கண்ணதாஸ் யாழ். பல்கலைக்கழகத்தின் இசைத்துறையில் மிருதங்க கற்பித்தல் பணியில் ஈடுபட்டு வருகின்றார். தமது பத்தாவது வயதில் தந்தை தமிழ்மணி திரு.சுப.கணேசசுந்தரம் அவர்களின் கதாகாலட்சேபத்தில் மேடையேறி இன்று வரை ஈழத்தின் மூத்த இசைமேதைகள், நடன ஆசிரியைகள், ஆற்றுகையாளர்களின் ஆற்றுகைகளுக்கு மிருதங்கம் வாசித்து வரு கின்றார். தொடர்ந்தும் ஆர்வத்துடன் ஆற்றுகை, கற்பித்தல் ஆகிய வற்றில் ஈடுபட்டு வரும் இவர், மூன்றுமுறை சுவிஸ் உட்பட பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, நோர்வே, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு அரங்கேற்றங்கள், இசையரங்குகள் ஆகியவற்றிற்கு மிருதங்கம் இசைப்பதற்காகச் சென்றிருக்கிறார்.

## ருக்மிணிகாந்தன் சாரங்கன்



யாழ் இந்துகல்லூரியில் தரம் 10 இல் கல்வி பயிலும் இவர், இசை பாரம்பரியத்தின் வழிவந்தவராவர். கல்லூரி இசை நிகழ்வுகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றி வருகிறார். குரு நல்லை க.கண்ணதாஸ் அவர்களிடம் சீடனாக தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கும் மேலாக மிருதங்கக் கலையை பயின்று வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



ஆயகலைகள் அறுபத்தி நான்கினுள் மிருதங்கக் கலையும் உன்னதமான ஓர் அங்கமாக மிளிர்கின்றது என்றால் அது மிகையாகாது இசைக்கு ஏழு ஸ்வரங்கள் போல இவ் வாத்தியமும் ஏழு சொற்களை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது.

மிருதங்கக் கலையானது மிகவும் தொன்மையானதாக இருந்தாலும் தற்போதைய நவீன காலத்திலும் இக்கலையை இந்துக்கள் மட்டுமன்றி பிற நாட்டவரும் விரும்பிக் கற்று வருகின்றனர். இக்கலையைப் பயின்று காலம் தோறும் பற்பல மேதைகள் அக்கலையை மிளிரச் செய்து வருகின்றனர்.

இன்னும் சிறப்பாக கூறுவதானால் அம்பலத்து அரசனாம் நடராஜப் பெருமானுக்கு பெருமான் ஆடுகின்ற போது நந்தியெம் பெருமான் மிருதங்கம் வாசிக்கின்றார் என்று புராணங்கள் கூறுகின்றன. உலக இயக்கத்திற்கு காரணமான சில நடனங்கள் பிரபஞ்ச தத்துவத்தை குறிக்கின்றன. நடனத்திற்கு அரசனாம் நடராஜப் பெருமானின் திருஉருவம் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துகின்றது.

இத்தகைய மகத்துவமான மாண்பு பொருந்திய உன்னதமான மிருதங்க வாத்தியத்தை முறைப்படி அதுவும் குரு சிஷ்ய முறைப்படி ஒன்றல்ல, இரண்டல்ல ஐந்து வருடங்கள் யாழ்நகரில் ஏன் இலங்கையில் என்று கூறக் கூடிய புகழ்பூத்த யாழ்பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளராகப் பணியாற்றுகின்ற திரு. நல்லை க.கண்ணதாசன் அவர் களிடம் இக்கலையை பயின்றமை கலையை பயின்றவரது மகா பாக்கியம் என்றே கூற வேண்டும்.

அதே சமயம் யாழ்.இந்துக்கல்லூரியில் கற்கும் பதினைந்தே வயதான செல்வன் ரு.சாரங்கன் அவர்களை இத்துறையில் ஈடுபடச் செய்து நிறைவு பெறச் செய்தது அவரது பெற்றோர்கள் ஆகிய தந்தை ருக்மிணிகாந்தன், தாயார் நகுலேஸ்வரி ஆகியோர் முன் செய்த தவப்பயன் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இதனையே வள்ளுவர் மகன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமையை "இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்" என்பதன் மூலமும், தந்தை மகனுக்கு செய்ய வேண்டிய கடமையை அதாவது "அவயத்து முந்தியிருப்ப செயல்" என்றும், தாயார் மிகப் பெரிதும் உவப்பாள் சான்றோன் எனக் கேட்ட தாய் என்றும் கூறியிருக்கின்றார்.

இத்தகைய சிறப்புப் பொருந்திய மிருதங்க வாத்தியத்தை முறைப்படி கற்ற செல்வன். ரு.சாரங்கன் அவர்கள் தனது குருவின் நல்லாசியுடனும், பெற்றோர் ஆசியுடனும் மேலாக இறைவன் திருவருள் துணையுடனும், மிருதங்கக் கலையில் மென்மேலும் பிரகாசித்து மேன்மையுற வேண்டும் என்று எல்லாம் வல்ல கரைப்பிரான் விநாயகப் பெருமான் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிறைவு செய்கின்றோம்.

சிவஸ்ரீ சோம.சிவகுமாரக்குருக்கள்
திருவருள் மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் தேவஸ்தானம்
ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச்செய்தி



கலா ரசிகர்களுக்கு !

இன்று அரங்குக்கு வரும் செல்வன் சாரங்கன் மிருதங்கக் கலையை முறையாகப் பயின்று குருவினுடைய, இறைவனுடைய ஆசீர்வாதத்தையும், பெற்றோர்களினுடைய நன்மதிப்பையும் பெறுகின்ற நாள் அரங்கேற்றம் ஆகும். நீண்ட இசைக்குடும்பத்தில் பிறந்த சாரங்கன் மிருதங்கக் கலையில் தனக்கென ஒரு இடத்தை வகுத்துக் கொண்ட கண்ணதாசனை குருவாகக் கொண்டு ஏழு சொற்களைக் கொண்ட தோல் வாத்தியமாகிய மிருதங்கக் கலையை கற்று இசை உலகத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கல்வியிலும் ஏனைய பல்துறைகளிலும் தனக்கென ஒரு இடத்தை வகுத்துப் பல்லாண்டு வாழ்கின்ற ஆசியை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

- இரண்டாவது குருமஹா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ லங்கா திரு.வ. ருக்மிணி காந்தன் திருமதி. நகுலேஸ்வரி தம்பதியரின் குமாரன் ருக்மிணி சாரங்கன் (யாழ் இந்துக் கல்லூரி மாணவர்) அவர்களின் மிருதங்க அரங்கேற்றம். யாழ் ஏழிசை மிருதங்க நர்த்தனாலயாவின் நற்குரு நல்லை. க. கண்ணதாஸ் அவர்களின் பரிபூர்ண ஆசிகளுடன் நடைபெறும் இத்தருணத்தில் தில்லை அம்பலவாணர் பேருள் கிடைத்திட வேண்டி தில்லை வாழ் அந்தணக் குலச் செம்மல் பிரும்மஸ்ரீ ச. சங்கர தீக்ஷிதர் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் சார்பாக அளிக்கப்பெறும்

# ஆசிர்வாத ரூப வாழ்த்து மடல்

இடம் : பால அரங்கம்
இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
யாழ்ப்பாணம்

நாள் : 30 - 12 -2016
கிழமை : வெள்ளி

அன்னம் பாலிக்கும் நன்னகர் தில்லைசேர்
பொன்னார் மேனியன் பொன்னம் பலவாணர்
திருவருள் வேண்டி திருவடி தரிசனம்
பெரும்பேறு என்றே வாழ்ந்திடும் பெருங்குலம்
யாழ்ப்பாண நல்லூர் சேர்ஞானப் பிரகாசம்
பூட்டனாய் விளங்கிடும் நற்குல பாட்டன்
வேய்ங்குழல் வித்வான் வசந்தகுல சிங்கம்
பெற்ற ருக்மணி காந்தன்இணை நகுலேஸ்வரி
உற்ற இல்லறப் பயனால் ஈன்ற
புதல்வன் ருக்மணி காந்தன் சாரங்கன்
இதமுறு யாழ்இந்துக் கல்லூரி பயில்நல்
மாண்புறு மாணவர் குலத்துச் செம்மல்;
காண்புறு நன்னூல் எல்லாம் கற்று
தெய்வீக இசைதரு மத்தள வாத்தியத்து
பரிணாம இசைக்கருவி இசைத்திட வேண்டி
யாழ்ஏழிசை மிருதங்க நர்த்த னாலயா
வாழ்நற் குருநல்லை கண்ண தாசர்
வாழ்த்தும் சீலமெலாம் ஒருங்குற்ற நற்சீடன்
தற்கால ஏற்றமிகு இசையால் வளரும்;
பொற்புறு மிருதங்கம் வாசிக்கும் திறனால்
யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
திகழ்நல் பாலஅரங்கம் தண்ணில் நிகழும்
அரங்கேற்றம் அகிலத்து பரவி நின்றிடும்
பரம்பொருள் அருள்போல் சிறப்பொடு நிலைத்திட
ஆடல் வல்லான் அருள்துணை வேண்டி
பாடல் இதனால் பாங்குற வாழ்த்துவாம்.



இடம் : தில்லை அம்பலம்
நாள் : 12 - 12 - 2016



இங்ஙனம்,
ச. சங்கர தீக்ஷிதர் & சன்ஸ்
(+91)-9042916424



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவின் குருவினது ஆசியுரை



நல்லை கண்ணதாஸ் அவர்களின் மாணவன் செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன் அவர்களின் அரங்கேற்ற விழாச் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐம்பதுகளில் பேராசான் ஏ.எஸ். இராமநாதன் அவர்களின் இலங்கை வருகை இசைத் துறையில் குறிப்பாக மிருதங்கத் துறையில் புதிய திருப்பமொன்றை ஏற்படுத்தியது. நாதமும் லயச் சிறப்பும் மிக்க செந்நெறி மிருதங்க இசைமரபொன்று இங்கே அறிமுக மாயிற்று. வழிவழியாகப் பேணப்படுவரும் அத்தூய இசை மரபு கண்ணதாஸ் அவர்களால் இந்த அரங்கேற்றத்தின் ஊடாக சாரங்கனிடம் கையளிக்கப்படுகிறது.

கண்ணதாசன் என நான் அழைக்கும் கண்ணதாஸ் என் அன்புக்குரிய மாணவன். என் மீது அதீத அன்பு கொண்டவர். அவரின் வாசிப்பைப் போன்றே குருவை அவர் நேசிக்கும் பாங்கும் நேர்த்தியானது. அவர் நெறிப்படுத்தும் பதின்மூன்றாவது அரங்கேற்றம் இதுவாகும்.

செல்வன் சாரங்கன் கலைப்பாரம்பரியம் மிக்க குடும்பப் பின்னணியைக் கொண்டவர். பேரன் புகழ் பூத்த புல்லாங்குழற் கலைஞர். பூட்டனார் அந்நாளில் தலைசிறந்த அண்ணாவியாராகத் திகழ்ந்தவர். தம் முன்னோரின் வழித்தடத்தில் சாரங்கனும் வீறுநடை போடுவார் என நம்பிக்கையோடு அவரின் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**மா.சிதம்பரநாதன்**
முன்னாள் விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவினது வாழ்த்துச்செய்தி



உலகத்தினையும், அதிலே வாழக்கூடிய ஜீவராசிகளையும் படைத்த இறைவன், அந்த ஜீவராசிகளது மன மகிழ்வுக்காகவும், உளச் சமநிலைப்படுத்தலுக்காகவுமென உருவாக்கிய அற்புதமான கலையே இசைக்கலை என்பர். இந்த இசைக் கலையினது இரண்டு பிரதான அம்சங்களாகத் திகழ்பவை சுருதியும், லயமும் ஆகும். இதில் லயத்தினது உட்கூறுகளை, தாளக் கணக்கு வழக்குகளை, அதில் உருவாகுகின்ற ஜதிப் பெருக்கங்களை நாத ரூபமாக வெளிப்படுத்துபவை லய வாத்தியங்கள் எனப்படும் தாள வாத்தியங்கள் ஆகும். அத்தாள வாத்தியக் கருவிகளுள் மிக முக்கியமானதும், உலகப் புகழ் மிக்கதும், கர்நாடக இசையினது தலைமைத் தாள வாத்தியமாகவும் திகழ்வது மிருதங்க வாத்தியமாகும். அத்தகு பெருமை மிகு மிருதங்க வாத்தியத்தினை என்னிடம் பயின்று அரங்கேறிய பன்னிரு மாணவர்களுக்கு அடுத்த படியாக இன்று அரங்கப் பிரவேசம் காண்கின்றார் செல்வன் ருக்மிணி காந்தன் சாரங்கன் அவர்கள்.

சாரங்கன், நீண்டதொரு கலைப்பாரம்பரியப் பின்னணி கொண்ட குடும்பத்தினைச் சேர்ந்தவர். பூட்டன் பிரபலமானதொரு அண்ணாவியார் பேரன் புகழ்பூத்த புல்லாங்குழல் வித்துவான். தந்தையார் ஒரு பல்துறைக் கலைஞன் தொடர்ச்சியாக கடந்த ஆறு வருடங்களாக என்னிடம் மிருதங்கம் பயின்று வரும் சாரங்கனுக்கு, அரங்கேற்றம் செய்வது பற்றி முதலில் நான் தயங்கினேன். ஏனெனில் அவரது மிக மென்மையான தன்மை, கடைக்குட்டி என்ற செல்லச்சூழல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு கடின உழைப்புக்கு இவர் ஈடு கொடுப்பாரா என எண்ணினேன் ஆயினும், போகப்போக சாரங்கனின் குடும்ப ரீதியான கலைஞானமும், அப்பா, அம்மா, சகோதரிகளினது ஊக்கமும் ஒருங்குசேர, நான் கொடுத்த மிகக் கடினமான பாடங்களைக் கூட மிக விரைவில் மனனம் பண்ணி, சுய பயிற்சி செய்து விருப்புடன் கற்றுக் கொள்ளும் தன்மை கண்டு எனக்குள் நம்பிக்கை துளிர்த்தது.

சாரங்கன் எமது நாட்டினது ஒரு நல்ல மிருதங்க கலைஞராக எதிர்காலத்தில் மிளிர்வார் என்ற பரிபூரணமான நம்பிக்கையை உங்கள் மனங்களில் விதைக்கக்கூடியவராக இன்று அவரை உங்கள் முன் அறிமுகம் செய்து வைக்கிறேன். உங்கள் எல்லோரது நல்லாசிகளும், ஆதரவும் என்றும் அவருக்குக் கிடைக்க வேண்டும். கலையும், கலைப்பண்புகளும், கல்விச் சிறப்பும் நிறைந்த சாரங்கனின் பெற்றோர், சகோதரிகளின் உழைப்பும், ஊக்கமும் கூட இந்த அரங்கேற்ற வெற்றிக்கு உந்துகோலாக இருக்கிறது என்றால் மிகையில்லை.

எனது மாணவனின் மிருதங்க அரங்கப் பிரவேசம் மிகச் சிறப்பாக அமைய எல்லாமுமாக என்தனை வழி நடத்தும் எனது குருநாதரினது பாதம் பணிந்து குருவருளையும், எல்லாம் வல்ல நல்லையம்பிரானை இறைஞ்சி திருவருளையும் வேண்டி வாழ்த்தி நிற்கிறேன்.




**நல்லை க.கண்ணதாஸ்**
விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



உலகின் பாரம்பரியமிக்க பண்பாட்டுப் பின்னணிகளிலே மிகவும் புகழ்பூத்த பண்பாட்டுப் பின்னணியின் சொந்தக்காரர் நாம். அதிலும் யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பின்னணி என்பது தமிழர் மரபிலே தனித்துவமானது.

சைவக்கலைகளாலும் சைவசமயப்பாரம்பரியத்தினாலும் யாழ்ப்பாணத் தமிழர் மரபு செழுமை பெற்று அதன் வெளிப்பாடாக கோவில்களும், கல்விக்கூடங்களும், சமூக நிறுவனங்களும், கலைக்கூடங்களாகத் திகழ்ந்த காலம் இம்மண்ணினது பொற்காலம். இடையில் ஏற்பட்ட யுத்த நிலமைகளும், அதன் வடுக்களும் எமது மக்களை மிகவும் பாதித்த போதும் சாம்பல் மேட்டில் இருந்து முளைக்கும் பீனிக்ஸ் பறவை போல் எத்தனை இடர்கள் வந்தாலும் எமது சமயத்தின் தொன்மைகளையும், கலைகளையும், பண்பாட்டு க் கோலங்களையும் பேணிப்பாதுகாக்கின்ற ஒரு சமூகம் சதா இயக்கிக் கொண்டிருப்பது எமது சைவத்தமிழ்ப் பண்பாட்டின் நிலைபேறினை உறுதி செய்வதற்காகவே என்பது எனது அசையாத நம்பிக்கை.

நான் செல்வன் சாரங்கனைப் போல மாணவனாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பயின்ற போது மிருதங்க அரங்கேற்றம், பரதநாட்டிய அரங்கேற்றம், என யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் வாரத்தில் குறைந்தது மூன்று நிகழ்வுகளில் மண்டபம் நிறையும் அந்த ரசிகர்களில் நானும் ஒருவனாகத் தவறாது கலந்து கொள்வேன். இதனால் மரபுக் கலைகளில் ஒரு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது.

இன்று இந்நிலைமை மாறினாலும் செல்வன்.ருக்மிணிகாந்தன் சாரங்கன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் எமது மரபிற்குப் புதிய அத்தியாயத்தினை உருவாக்கும் ஒரு நிகழ்வாகவே காண்கின்றேன்.

செல்வன்.ருக்மிணிகாந்தன் சாரங்கன் இயல்பாகவே இசையிலும், பட்மின்டன் போன்ற விளையாட்டிலும் மிகவும் ஈடுபாடு கொண்ட ஒரு உன்னதமான மாணவன். இவர் எமது கல்லூரியில் இடம் பெறும் கலை நிகழ்வுகளிலும், போட்டிகளிலும் பங்குபற்றுவதோடு மாகாண, தேசிய மட்ட சாதனைகளையும் வென்று வருபவர். ஆசிரியர்களின் மிகுந்த நன்மதிப்பு பெற்ற இவர் தம் திறமையால் கல்லூரிச் சமூகத்தினருக்கும் சகநண்பர்களுக்கும் மிகவும் பிரியமாகப் போற்றப்படுவர் மட்டுமன்றி கல்விச் செயற்பாடுகளின் முன்னிலையில் காணப்படுபவர்.

இலங்கையிலே மிகவும் புகழ்பூத்த மிருதங்கக் கலைஞரான திரு.க.கண்ணதாஸ் இவரது குருவாக வாய்த்தமை இவருக்குக் கிடைத்த வரம். குருவே ஒருவரின் தலையெழுத்தை நிர்ணயிப்பவர் என்ற வகையில் மதிப்பார்ந்த மிருதங்க ஆசான் திரு.க.கண்ணதாஸ் அவர்கள் இவருக்கு குருவாக வாய்த்தமை சாரங்கனின் தவப்பயனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது தந்தை தாயார் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் மிகவும் புகழ்பூத்த கல்வி, பண்பாட்டு பாரம்பரிய பரம்பரையில் வந்த பெருமக்கள். இவரது தந்தையார், பேரன், தந்தையாரின் சகோதரர்கள் அனைவரும் சிறந்த கல்விமான்களும் கலைகளைப் பேணிக்காக்கும் பரம்பரைக் கலைஞர்களுமாவர். முகப்புத்தகங்களிலும் மற்றும் சமூக வலைத்தளங்களிலும் இன்றைய இளம் சமூகம் மூழ்கி கிடக்கும் இந்நேரம் தனது மகனை மரபுக்கலைப் பண்பாட்டுடன் வளர்க்கத் துணிந்த இவர்களது வீரம் அனைத்துப் பெற்றோர் களுக்கும் முன் உதாரணம். அரங்கேற்றம் என்பது ஒரு அங்கீகாரம். அதனை நிறைவு செய்து கொண்ட பின்னரும் இத்துறையில் ஒரு நட்சத்திரமாகப் பிரகாசித்துக் குருவால் போற்றப்படும் சீடனாக வாழத் தொடர்ந்தும் உழைப்பதுடன் உலகம் போற்றும் ஒரு உன்னத மிருதங்கக் கலைஞனாக பல மேடைகளை அலங்கரித்துப் புகழோடு வாழ்வதுடன் இளம் சமூகத்திற்கும் ஒரு உதாரண கலைஞராக மிளிர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

ஐ.தயானந்தராஜா
அதிபர்
யாழ். இந்துக்கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கலைகள் அனைத்தும் மனிதன் மனதுக்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் கொடுப்பன. மனிதனை மனிதனாக வாழ வைக்கவும், சிறந்த மனப்பாங்கை உருவாக்கவும் சமூகத்தின் பால் அவனுக்குள்ள பண்புகளை வளர்த்தெடுக்கவும் இவை உதவுகின்றன. அந்த வகையில் லலித கலைகள் சிறப்பிடம் பெறுகின்றன. இதில் பல்வேறுபட்ட துறைகள் இருக்கின்றன. இவ்வகைப்பட்ட கலைகளில் மாணவர்கள் தங்களுக்கு கைவரக்கூடிய துறையைத் தெரிவு செய்து தாம் கொண்ட இலட்சியத்தில் இறுதி வரை முயன்று வெற்றி காணவேண்டும். சிலர் தங்கள் குறிக்கோளை அடைகின்றனர். சிலர் இதிலிருந்து விலகிப் படித்த கலைகளை இடை நிறுத்திப் பின் வாங்குகின்றனர்.

இந்தப் பின்னணியில் திரு.வ.ருக்மிணிகாந்தன் திருமதி நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புப் புதல்வன் செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன் அவர்கள் தான் தேர்ந்த மிருதங்கக் கலையை கடந்த ஐந்து வருடங்களாக முறையாகப் பயின்று சாதனை படைத்து அரங்கேறுகிறார் என்பது மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமான விடயமாகும். இவர் ஈழத்தின் புகழ்பூத்த மிருதங்க வித்துவான் திரு.க. நல்லைக் கண்ணதாசன் அவர்களிடம் பயின்று இன்று ஒரு மிருதங்கக் கலைஞனாக மிளிர்வது எல்லோருக்கும் பெருமைக்குரிய விடயமாகும்.

மேலும் இவரின் குடும்பப் பின்னணியும் பெற்றோரின் தூண்டுதலும் இவர் இந்த நிலைக்கு உயர்வதற்கு உதவியது என்றால் அது மிகை இல்லை. இவருடைய பேரன் திரு.G.S வசந்தகுலசிங்கம் ஒரு வேய்ங்குழல் வித்துவானாகத் திகழ்ந்தவர். அக்காலத்தில் இத்துறையில் சிறந்த மதிப்பைப் பெற்றுத் திகழ்ந்த ஒருவர். இன்னும் இவர் பூட்டன் திரு.அப்பாலை சிமியோன் ஞானப்பிரகாசம், மக்களால் மதிக்கப்பட்ட அண்ணாவியாராகத் திகழ்ந்தவர்.

எனவே இவரது குடும்பப் பின்னணியும், பெற்றோரின் ஊக்குவிப்பும் குருவின் ஆசியும் குறிப்பாக இவரின் விடாமுயற்சியும் இவரை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது. எதிர் காலத்தில் இவர் தான் சார்ந்த துறையில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.



கலாபூஷணம் இசைத்தென்றல்
ம.யேசுதாசன்
திருமன்றக் கலாமன்றம்
இசைத்துறை பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



விருப்பத்தினால் கற்ற கலை மூலம் பெறும் அறிவும் திறனும் பொதுவானதொரு வகை என்பது தெளிவு. ஆயினும் செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன் போல் பரம்பரையான கலைக் குடும்பமொன்றில் ஜனித்து குருதியில் ஊறிவிட்ட எழிலான கலையை ஏற்றமுடன், முன்னோர் சொன்ன குரு சிஷ்ய பாரம்பரியத்தில் கற்றுத் தெளியும் போது அது தரும் ஆற்றலே தனியானது. குரு நல்லை க.கண்ணதாஸ் அவர்கள் தேர்ந்தெடுத்து ஐந்து வருடமாகச் செதுக்கிய சிற்பமாய், மிருதங்கம் எனும் கர்நாடக சங்கீதத்தின் தலையாய தாள வாத்தியத்தில் தனது விரல்களினால் வித்தை படைப்பவனாய் இன்று அரங்கேறும் சாரங்கனைக் காண இதே குடும்பத்தின் ஓர் அங்கமாய் உள்ளதையிட்டு உள்ளம் புளகாங்கிதம் அடைகின்றது.

பூட்டனார் அண்ணாவி அப்பாலை என சமூகம் கொண்டாடிய சிமியோன் ஞானப் பிரகாசம் அவர்களது புதல்வன் ஜீ.எஸ்.வசந்தகுலசிங்கம் மாஸ்டர் ஒரு வேய்ங்குழல் வித்துவான். அவர் மகனும் சாரங்கனின் தந்தையுமான ருக்மிணிகாந்தன் எனும் அப்பாலை பல்வேறு கலைக்கோலங்களை மேடையில் காண்பிக்கும் திறன் கொண்டவர். சாரங்கனும் டிரம்ஸ் போன்ற மேலைத்தேய வாத்தியங்களை விளாசித் தள்ளும் வித்த கனாய் சிறந்த பாடகனாய் மிளிர்வதை பல மேடைகளில் கண்டு ரசித்திருக்கின்றேன்.

இச்சிறுவன் தன் அரங்கேறலை இன்று செல்வனே செய்து கலை உலகின் தலைமகனாய் பல்வேறு பட்டங்கள் பெற்று சிறக்க எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சி நிற்கிறேன்.

**எம்.ஆர். ராஜ்மோகன்**
சிரேஷ்ட சுங்க பணிப்பாளர் - சட்டத்தரணி
M.Sc, M.A, LLM, LLB (Hons)
London FICS (UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் தலைவரின் உள்ளத்தில் இருந்து...



நந்திவாத்தியம் எனத் தெய்வீகக் கலையாகப் பூசிக்கப்படும் மிருதங்கக் கலையை முறைப்படி பயின்று செல்வன் ருக்மணிகாந்தன் சாரங்கன் அரங்கேற்றம் காண்கின்றார். அரங்கப்பிரவேசம் காணும் இளம் கலைஞரிடத்தும் அவர்தம் குருவிடத்தும் ஒரு நீண்டகலைப் பாரம்பரியம் இருப்பது இக்கலையின் இயல்பான வெளிப்பாட்டிற்கு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது.

யாழ். ஏழிசை மிருதங்க நர்த்தனாலய இயக்குநர் குரு நல்லை க. கண்ணதாஸ் பற்றி இங்கு நான் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. இயல்பாகவே ஒரு கலைஞன் கொண்டிருக்க வேண்டிய அத்தனை ஆற்றல்களையும் கலைமகள் அவருக்கு வழங்கி யிருக்கின்றாள். அவரது இசைஞானமும் கரவேகமும் இதற்கான சான்றுகளாம்.

செல்வன் ரு.சாரங்கனின் குடும்பப் பின்புலத்திலும் சிறந்த கலைத்துவப் பாரம்பரியம் காணப்படுகின்றது. இவரது பூட்டனார் அண்ணாவியாராகவும் பேரனார் புல்லாங்குழல் வித்துவானாகவும் புகழ் பெற்றுள்ளனர். குடும்ப இசைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக செல்வன் ரு.சாரங்கனின் அரங்கேற்றம் இன்று அமைகின்றது.

தற்போது அரங்கேற்றம் காணும் இளம் கலைஞர்கள் உயர்தரத்தில் சிறந்த பெறுபேறு-களைப் பெற்று வெவ்வேறு துறைகளில் காலடி பதிப்பதை அவதானிக்கின்றேன். இது ஆரோக்கியமானது. கலை ஆற்றுகை என்பது இதயத்திற்கானதாகவும், கல்விசார் அறிவுத் தேடல் மூளைக்கானதாகவும் இவர்கள் கொள்கின்றனர். இதயத்திற்காக வழங்கப்பட்ட கல்வி நல்ல விழுமியப் பண்புகளை ஏற்படுத்தும். அதைவிடுத்து மூளைக்கான கல்வியை மட்டும் வழங்கும் போது இயந்திரத்தனமாக வாழ்வியலின் திணிப்பே வாழ்க்கையில் எஞ்சுகின்றது. இது மனஅழுத்தமாகக்கூட வெளிப்பட்டு மனிதரை வாட்டுகின்றது.

சாரங்கன் சிறந்த விழுமியப்பண்புகளை அடைய வேண்டுமென்பதற்காக ஏற்ற வழி-வகைகளை முன்கூட்டியே மேற்கொண்ட அவரது பெற்றோருக்கு எனது பாராட்டுக்கள்.

அரங்கேற்றம் சிறப்புறவும் சாரங்கனின் கலைப்பயணம் மாண்படையவும் வாழ்த்து வதில் உவகையடைகின்றேன்.

செந்தமிழ்ச்சொல்லருவி
ச.லலீசன்
பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை
பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01
தானவர்ணம் 5.00PM.
இராகம் : ஆபோகி
தாளம் : ஆதி
இயற்றியவர் : பட்டணம் சுப்ரமண்யஐயர்

02
இராகம் : நாட்டை
தாளம் : ரூபகம்
இயற்றியவர் : வசாவிளான் தவமைந்தன்

**பல்லவி**
வேழ முகனின் மலர்ப்
பாதம் பணிவோம்

**அனுபல்லவி**
சூழும் வினைகள் பறந்தோட
நாளும் அருள் தரும்

**சரணம்**
சீலன் முருகன் சோதரன் ஆனவன்
மூலவன் முன்னவன்
திருவடி நினைந்திட
அருள் மழை பொழிந்திடும்

03
இராகம் : பிலஹரி 5.25
தாளம் : ஆதி
இயற்றியவர் : அருட்கவி வினாசித்தம்பிப் புலவர்

**பல்லவி**
சிற்றம்பலத்துள் ஆடும் ஈசாநின் பாதத்தை
தரிசிக்க வரம் தருவாய் சிவகாமியுடன்

**அனுபல்லவி**
சுற்றும் பணி அணிந்து தூய வெண்ணீறணிந்து
சற்றைச் சடைமுடிமேல் கதிர் மதியைப் புனைந்து

**சரணம்**
பற்றுப் பிறிதில்லாத பாவலர் பாடிட
பங்கஜனும் மாயனும் பக்தி கொண்டாடிட
நற்றவஞானியர் நாடி அறிந்திட
நமச்சிவாய வடிவின் நாதம் பிறந்திட

04
இராகம்,தானம்,பல்லவி
இராகம் : தர்மவதி
தாளம் : ஆதி
இயற்றியவர் : நல்லைக.கண்ணதாஸ்
ஸ்வர அமைப்பு : வசாவிளான் தவமைந்தன்

இதம் தரும் லயம் தனில் இன்புறு
வோம் நிதம் குரு நாதர் பதம் பணிந்து

05
இராகம் : பெஹாக்
தாளம் : ஆதி (திஸ்ர நடை)

**பல்லவி**
இரக்கம் வராமல் போனதென்ன காரணம்
என் சாமி

**அனுபல்லவி**
கருணைக் கடல் என்று உன்னை
காதில் கேட்டு நம்பி வந்தேன்

**சரணம்**
ஆலமருந்தி அண்டர் உயிரை
ஆதரித்த உனது கீர்த்தி
பாலகிருஷ்ணன் பாடி நிதமும்
பணிந்திடும் நடராஜ மூர்த்தி
பழி எத்தனை நான் செய்யினும்
பாலித்திடும் சிதம் பரம் என்று
மொழி கற்றவர் வழியுற்றுனை
முப்பொழுதும் மறவேனே

06
இராகம் : யமன்கல்யாணி
தாளம் : ஆதி

**பல்லவி**
திருப்பதி மலை மேலே இருக்கின்ற பெருமானே
திருமகள் அலர்மேலு மனம் மகிழ் அழகோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருப்படிகள்

அனுபல்லவி
நிருபமுடன் வந்தோர்க்கு அருள் தரும் வள்ளலே
வரதனே ஸ்ரீனிவாச வேங்கட நாயகனே

சரணம்
ஏழுமலை வாசனே என்றும் அன்பர் நேசனே
எங்கும் நிறைஈசனே மங்கள ஸ்வரூபனே
வாழும் வழி சொல் எனக்கு வைகுண்ட வாசனே
வகையறியாமலே பிழைபல செய்தேனே

07
தில்லானா

இராகம் : நிரோஸ்ரா
தாளம் : ஆதி
இயற்றியவர் : வசாவிளான் தவமைந்தன்

பல்லவி
தில்லானா ததீம்த தனதிரனா நாத்ருதீம், தனதிரன

அனுபல்லவி
தீம்;. னனனதீம் தீம்தீம்த தீம்;. தில்லானா தில்லானா
ஜெணுததத்,தீம் தநிதநீதா ஜெணுததத்,தீம் ஸரிகதாநிதீம்;;
ஜெணுததத்,தீம் தநிதநீதா ஜெணுததத்,தீம் ஸரிகாதாநிதீம்;;
ஜெணுததத்,தீம் தநிதநீதா ஜெணுததத்,தீம் ஸரிகா,தா;

சரணம்
தாய் நீ அல்லவோ தீனதயாபரி
சேயென் குறைதீர்க்கும் சுந்தரி
மாயோன் சகோதரி மாதவ மனோஹரி
நீயே தவமைந்தன் என் நெஞ்சில் நிறைந்தவள்

ஸரிகரிகதீம்தீம் தகதநிததீம்தீம்;. தனதீம்,தக
தனதீம். ஜெணுதீம் தனதீம் ரிக்ரிரீ;. தநிததா;. ரிகரி
,தஜம்,தணம், தஜம்; ஜெணுதரிகிடதோம் நிரிநிநித
கரீநிதாகரீ,ஜெணுதரிகிடதோம் ரிரிரிததத
க்ரீநிதாகரீ,ஜெணுதரிகிடதோம் நிரிக்ரிநிநித

08
திருப்புகழ்
இராகம் : தேஸ்
தாளம் : மிஸ்ரசாபு
ஸ்வரஅமைப்பு :
வசாவிளான் தவமைந்தன்

சொரியுமுகிலை பதும நிதியை
சுருபி தருவை சமமாக
சொலியுமனமெட் டணையு நெகிழ் விற்
சுமடரருகுற் றியல் வாணர்
தெரியுமருமை பழைய மொழியை
திருடிநெருடி கவி பாடி
திரியுமருள் விட் டுனது குவளை
சிகரிபகரப் பெறுவேனோ

கரியபுருவ சிலையும் வளைய
கடையில் விடமெத் தியநீல
கடியக ணைபட் டுருவ வெருவி
கலைகள் பலபட் டனகாணிற்
குரிய குமரிக் கபய மெனநெக்
குபய சரணத் தினில் வீழா
உழையின் மகளை தழுவ மயலுற்
றுருகு முருகப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா



சீர் படைத்த தமிழ்ப் பாலகனாம் சாரங்கன் - சிறப்புடனே
பார் முழுக்கப் புகழ் பரப்ப வந்துதித்தான் - பதின்ம வயதில்
யார் கொடுத்த வரமோ தவமோ கலைமகள் - கைகளில் தவழ
வேர் தழைக்க விழுதென முளைத்தான் - பேரன் புகழ் நிலைக்க

யாழ் கொடுத்த ஆசானாம் வசந்த குலசிங்கம் - அன்று
வாசித்த குழல் இசையோ இலங்கும் இடம் ஆனைக்கோட்டை
மீள் பிறப்பாய் யாசித்து வந்துதித்தான் பேரனவன் பண்ணிசையை
பூசித்துப் பரவி நின்றான் பணிவுடன் - குரு வணங்கி கற்றிடவே

வானவரும் வாழ்த்திடுவர் விண்ணவரும் போற்றிடுவர் - வாய் திறந்து
ஊர் சிறந்த பிள்ளையென உள்ள மெலாம் புகழ்ந்திடுவர்
தாய் பெற்ற நோ மறப்பாள் தந்தை முகம் தான் சிறப்பான் - தனக்குள்
தான் பெற்ற பிள்ளையென தரணியையே மறப்பான்

தாளலயம் திரண்டொலிக்க உன் தங்கக் கரம் தகதகக்க - ஆங்கே
அரங்கேற்ற நேரத்திலே அனைவருமே உனை ரசிக்க
மிருதங்க மேதையென வரும் மாந்தரெலாம் உனை வியக்க - தூர நின்று
வாழ்த்துகிறோம் தெய்வத்தை நாம் வணங்குகிறோம்
வாழ்க வாழ்க நீடுழி நீ வாழ்க.

வசந்தகுலசிங்கம் உமாமகேசன்
நிறுவுனர்
சோனிக் எஸ்ரபிலிஸ்மன்ற இசைநிறுவனம்
ஐக்கிய ராச்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துப்பா



என் பாசத்துக்குரிய குழந்தாய்.....
என் மைத்துனரின்
பிள்ளையாகப் பிறந்து
நான்பார்க்க வளர்ந்தவன் நீ
இன்று பண்பு மிக்க இளைஞனாய்
பார் புகழும் வல்லவனாய் ...
இசைஞானம் கற்றுத்தேர்ந்த
இளவலாய் - எத்தனை வளர்ச்சி
உன்னிலே......

நீ தத்தி நடைபயன்ற நாட்கள்
இன்னும் என் கண்முன்னே மலர ..
நான் ஒவ்வொரு முறையும் ஊர்வரும் போது
நீ கட்டியணைத்து கனிவோடு தந்த முத்தம்
இன்னும் என் மனதிலே இனிக்க..
துள்ளித் திரிந்து துடுக்குகள் பல புரிந்து
மெள்ளச் சிறுவனாக வளருவது கண்டு
மனதுக்குள் மகிழ்ந்தேன் மருமகனே....

பள்ளிப் படிப்புக்கு சற்றேனும் சளைக்காது
மோகனத் தாளமிட்டு மிருதங்கமும் பயின்று
அரங்கேற்றம் காணும் இன்றைய நாளிலே
எங்ஙனம் உனைப் பாராட்ட ..
எங்கள் இசைக்குடும்பத்து வாரிசாய் நீ நிமிரும்
இந்தத் தருணத்தில் எத்தனை இறுமாப்பு எனக்குள்
இல்லாத உவகையெல்லாம் மனதுக்குள் உருண்டுவர
மகிழ்வோடு ஒரு துளி நீர் இமையோரம் எட்டிவர..
பாசத்தோடு பல கோடி வாழ்த்துக்களை
பக்குவமாய் அனுப்புகிறேன் பெற்றிடுக நீவீர்
புவி மீது என்றென்றும் பெரும்பேறாய் பெற்றிடுக நிலை...

இங்கிலாந்து மண்ணிலிருந்து
திரு.சூசைப்பிள்ளை றவி
M.I.EEE
*Mc. Joseph & Sons*
*Groop of Companies*
*London*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



நந்தி வாசிக்க, சிவபெருமான் தாண்டவம் ஆடி மகிழ தேவலோகம் முழுவதும் மிருதங்கத்தின் ஒலியால் கட்டுண்டதைப் போல சாரங்கனின் பிஞ்சுக்கரங்களால் இந்தத் தாளக் கருவியை இயக்கி நம்மை மெய்சிலிர்க்க வைப்பதில் பெருமிதம் அடைகின்றோம். இசைக்குடும்பம் எனும் பெருங்கடலின் ஒரு அருவியாய் உதித்து அவர்களின் இசைப்பயணத்தை இந்தத் தாளக்கருவியின் அரங்கேற்றம் மூலமாய் இந்த அரங்கத்தில் மெருகேற்றி பெருமை சேர்ந்து விட்டார். அவரது மூதாதையர்கள் இசையை சுவாசித்தும் இசையுடன் உறவாடியும், இசைக்கருவிகளுடன் விளையாடியும் வாழ்ந்தார்கள். அக் கருவிகளில் இன்னும் வாழ்கிறார்கள். செல்வன் ரு.சாரங்கன் இந்த இசை ஞானத்தை குருவின் மூலம் செம்மைபடுத்தி அதன் நுணுக்கங்களை மெருகூட்டி பக்தி சிரத்தையுடனும் நிலைபேற்றுடனும் இந்த அரங்கத்தையே தன் அரங்கேற்றத்தினால் ஆட்கொள்ள வந்துள்ளார். சாரங்கனின் இந்த அரங்கேற்றம் இசைப் பயணத்தின் ஒரு தொடக்கம் என்று கூறி மென்மேலும் பல அரங்குகள் காண எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டியும், வாழ்த்தியும் இந்த இசைப்பயணத்தை அவரின் மூதாதையர்க்கு சமர்ப்பித்து அவர்களின் ஆசியும் அருளும் என்றென்றும் கிடைக்கப் பெற வாழ்த்துகிறோம்.

**ராணி ரகு**
M.Com, M.A
C.A, B.Sc (Comp)
P.G.Dip Peforming
(ARTS DANCE, MUSIC, VEENA)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



உலகில் சரித்திரம் படைத்த சாகசங்கள் பல உண்டு. அவையாவும் மனித மன மகிழ்வுக்கே. இதில் இறைவன் மகிழ அவனால் படைக்கப்பட்ட மனிதன் கையாண்ட வித்தகம் தான் இசை, நாதம், தாளம். விஞ்ஞான உலகில் விலை உயர்ந்த கற்பனையின் கண்டு பிடிப்பில் வலம் வரும் வாத்தியங்களின் ஆணிவேரின் மூலப்படைப்பின் முதல் வாத்தியமாம் மிருதங்கத்தில் வித்தை கற்று அதை அத்தனை பேரின் முன் முத்திரை பதிக்க முன்வந்த முத்தழகுப் பெட்டகமே! முடிந்த மட்டும் முன்னேறு அதை முடிக்க முடியா தாகிலும், முடிந்தவரை முன்னேறு என நான் யாசித்து வெற்றி பெற ஆசிக்கிறேன்.

மூங்கில் குழலிலே மூச்சினை ஊதி முன்னவர் பலரை
மூச்சிரைக்க வைத்த வசந்தகுலசிங்கத்தின் பேரனே,
உனது பரம்பரை இசையில் சளைத்தவர்களே அல்ல என்பதால்
நீ எதிலும் சளைத்தவனும் ஆகாய்
இன்னும் நன்றே சாதகம் செய்
அதன் மூலம் சாதனை பல செய்
எதிர்வரும் காலத்தில் உன் கல்விக்கும் காலம் கொடு
ஆனால் பெறும் பட்டங்களுக்கும், பதவிகளுக்கும்
இன்று நீ செய்யும் அரங்கேற்றம் அழகுதரும் அணிகலனாய்
அமையட்டும் என்றும் ஆசிக்கிறேன்.

F.J. சாந்திகுமார்
அளம்பில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன் அவர்கள், எமது மண்ணின் கலை பண்பாடுகளில் ஒன்றான மிருதங்க அரங்கேற்றம் செய்வதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களை அழிய விடாமல் பாதுகாப்பதில் எனது மருமகனும் ஒருவர் என்பதில் பெருமிதம் கொள்கிறோம். பள்ளிப்பருவ வயதிலே ஏட்டுக்கல்வியுடன் நின்று விடாமல் கலைகளில் ஒன்றான மிருதங்கத்தையும் தனது அயராத முயற்சியுடன் முறையாகப் பயின்று அரங்கேற்றம் செய்வதை இட்டு பெரு மகிழ்வு கொள்கிறோம். இவரது இசைத் திறமை பாராட்டத்தக்கது....போற்றத்தக்கது.......

ஆயகலைகளையும் பெற்று இவர் மேன்மேலும் சிறந்து பார் போற்ற விளங்க எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க வளமுடன்
வளர்க உமது கலைத்திறன்....

திரு.கு.சந்திரபாலன்
லண்டன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேய்ங்குழல் வித்துவான் திரு.ஜி.எஸ்.வசந்தகுலசிங்கம் அவர்களது வரலாறு



குழல் இனிது யாழ் இனிது என்பார் தம் மக்கள் மழலைச் சொற்கேளாதவர். ஒரு மழலையின் இனிமைக்கு எதுவுமே இணையில்லை. ஆனாலும் அந்த இனிமையை அண்மித்து ஒப்பிடத்தக்கதாக அமைந்தது குழல் ஓசையும் யாழ் இசையுமென்பதை மேற்படி முதுமொழி பகிர்கின்றது. அது மட்டுமன்று கல்வித்தெய்வம் சரஸ்வதியின் வீணை, கண்ணன் கையில் குழல், இவையெல்லாம் தெய்வீக சின்னங்களாதலால் இவ் இசைக் கருவிகளில் வித்தகர்களும் தெய்வாம்சம் கொண்டவர்களே.

இவ் இசைக்கருவிகளில் வித்தகர், சிறப்பாக புல்லாங்குழலில் சிறப்புற தேர்ச்சியுடைய வருமாகியவர் ஆசிரியர் வசந்தகுலசிங்கம் இவர் 1917ம் ஆண்டு யூலை மாதம் 17ம் நாள் சிமியோன் ஞானப்பிரகாசம், றோசம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் உள்ளூர்ப் பாடசாலைகளிலேயே கல்வி கற்றுத் தமது திறமை முயற்சியின் பயனாய் அக்காலங்களில் அடையக் கூடியதான லண்டன் பல்கலைக்கழகச் சான்றுகளையும் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் பெற்று மிளிர்ந்தார். ஜீவனோபாயத் திற்காக ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு, ஆங்கிலம், கணிதம் ஆகிய இரு துறைகளிலுமே பயிற்றப்பட்ட ஆசிரியராகத் தகமை பெற்று பரமேஸ்வரா கல்லூரியில் (இன்றைய யாழ் பல்கலைக்கழகம்) கணித, விஞ்ஞான ஆசிரியராகக் கடமை புரிந்தார்.

இவரது தந்தை சிமியோன் ஞானப்பிரகாசம் பிரித்தானிய காவல்துறையில் ஒரு நகர் காவலராகக் கடமை புரிந்தாராயினும் மேலதிகமாக ஒரு இயல், இசை நாடகக் கலைஞ ராகவும் திகழ்ந்தார். "அண்ணாவி அப்பாலை" என அழைக்கப்பட்ட இவர் தென் மோடிக்கூத்துக் கலையில் கூத்து இயக்குனராய் ("அண்ணாவி") மிருதங்க வித்துவானாய், ஆர்மோனிய வித்தகராய், மற்றும் பாடகனாய், இவை யாவற்றையும் ஒரு பொழுது போக்குத் தொழிலாகவே செய்து வந்தார்.

இவர் சிறுவயதிலிருந்தே தமது கல்வி கற்றலினூடு சாஸ்திரிய சங்கீதம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல் மற்றும் நடனம் (கதகளி), நாடகம் (நாட்டிய நாடகம்) ஆகியவற்றிலும் ஆர்வமுற்றுப் பயின்றார். புல்லாங்குழலைச் சிறப்பாகத் தேர்ந்து அதில் சிறந்த ஆற்றுதற் கலைஞனானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர இலங்கையின் தேசிய கீதத்தை இலங்கை வானொலி முதலில் பதிவேற்றம் செய்த வேளை அணிசேர் கலைஞனாக இவர் புல்லாங்குழல் இசைத்தமை திறமைக்கு உயர் சான்றாகும். இத்தகைய ஒரு வேய்ங்குழல் வித்தகன், பல்கலைக்கலைஞன் மட்டில் இறைவன் சித்தம் அதுவாக, தமது 51 வது வயதிலேயே தமது கல்வித்துறை, கலைத்துறை இரண்டையுமே இடை நிறுத்தி இறைபதம் அடைந்தார்.

இவரிடம் குருசிஷ்ய மரபுவழியாக பல்வேறு இசைக்கருவிகளையும் சாஸ்திரீய சங்கீதத்தையும் பயின்றவர்களும், அவர்களின் வழித்தோன்றல்களும் இன்றைய இசை உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவரது புத்திரர்களும், வம்சாவளியினரும் இசைத்துறையில் பெருவிருப்புடன் ஈடுபட்டு கலைப்பணி ஆற்றி வருகின்றனர்.

இன்று அரங்கேற்றம் காணும் செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன் இவரது மகன் வழிப் பேரனாவார்.

**பெ.ஜீ.சதானந்தன்**
**ஓய்வுநிலை பிரதித் தொழில் ஆணையாளர்,**
**(தொழில்நுட்பம்)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

இறைவன் துணை கொண்டு இன்று எமது புதல்வன் சாரங்கன் அவர்களுடைய கலைத் துறையின் கன்னிப் பயணத்தில் முதல் மைல்கல்லான மிருதங்க அரங்கேற்ற நிகழ்வினில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த வணக்கங்கள்.

தலைமுறைகளாய் தொடர்ந்து வரும் இசையின் பால் எமக்குள்ள ஈடுபாடு இறைவன் எமக்களித்த வரமாகவே கருதுகிறோம். சிறுவயதிலிருந்தே தாள வாத்திய கருவிகளில் ஆர்வம் கொண்ட சாரங்கனின் முதல் மிருதங்க ஆசானாக ஆசிரியர், திரு. மதிரூபன் அவர்கள் அமைந்தார்.ஆரம்ப பாடங்களை அவரிடம் கற்று தெளிந்தார். சிறுவயது காரணமாகச் சிலகாலம் அவரது பயிற்சியை ஒத்தி வைத்திருந்தோம். மீண்டும் அவரது 10 வது வயதில் குரு.நல்லை க.கண்ணதாஸ் அவர்களிடம் மிருதங்கப் பயிற்சியை ஆரம்பித்தார். நல்லை க.கண்ணதாஸ் அவர்கள் இலங்கை இசை உலகத்திற்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்; இசைப்பெட்டகம். பரம்பரைக் கலைஞரான இவர் இன்றைய தாள வாத்திய கலையூடு ஆற்றிக் கொண்டு இருக்கும் சாதனைகள் அளப்பரியன. இவர் சாரங்கனுக்கு ஆசானாக அமைந்தமை யாம் செய்த முன்தவப்பயனே. இந்த மிருதங்க பிரம்மா படைத்த கலைஞர்கள் பலர் இன்று இசையுலகில் சாதனைகள் செய்கிறார்கள். தன்னிடம் உள்ள கலையை தடையின்றித் தன் மாணாக்கர்களுக்கு வழங்கிவரும் இசையுலகின் கர்ணனுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். சில இடையூறுகளின் மத்தி யிலும் தொடர்ந்து தனது குருவாகிய கண்ணதாஸ் அவர்களிடம் 5 வருடங்களாக தொடர்ந்து மிருதங்கக் கலையைப் பயின்று இன்று அவரது நல்லாசியுடன் அரங்கேற்ற ஆற்றுகை வரை வளர்ந்தமை யாம் பெற்ற பாக்கியம். சாரங்கனில் உளப்பூர்வமான அன்பு கொண்டவர் குரு.கண்ணதாஸ் அவர்கள். சாரங்கனை தொடக்கத்திலேயே இனம் கண்டு மிருதங்கக் கலைஞனாக ஆக்க வேண்டும் என அரும்பாடுபட்டவர். இதற்காக தனது பெறுமதி வாய்ந்த நேரங்களை அவர் தியாகம் செய்திருந்தார். சாரங்கனால் மிருதங்க அரங்கேற்றத்தை வெற்றிகரமாக செய்யமுடியும்; அந்தத் திறமை அவருக்குண்டு என்ற நம்பிக்கையை எமக்குள் விதைத்து அதை செயல் மூலமும் காட்டி இன்றைய நிகழ்வின் நாயகனுக்கும் நாயகனாக உயர்ந்துள்ள பெரும் குருதேவனுக்கு எமது கோடானுகோடி வணக்கங்கள், நன்றிகள். கல்விச் செயற்பாடுகளுக்கு மத்தியில் அரங்கேற்றப் பயிற்சி-களை மேற்கொள்ளுவது சிரமமான ஒன்று தான். இருப்பினும் தனது அயராத உழைப்பி-னால் கல்விப் பெறுபேறுகளிலும் சிறந்த மட்டத்தை அடைந்து எம்மை மகிழ்வித்துள்ளார்.

இவரது மிருதங்கக் கலை ஆர்வம் அரங்கேற்றத்தையும் கடந்து மென்மேலும் பல சாதனைகள் ஆற்றவும் பல்கலைகளையும் கற்று முன்னோர்களுக்கு பெருமை சேர்க்கவும் எமது மனமார்ந்த ஆசிகள்.

பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கிசை கலைஞர்கள்



## பாட்டு

இசைமாணி திரு.தவநாதன் றொபேட்

யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையினது மூத்த விரிவுரையாளராகக் கடமை புரிந்து வருகின்ற திரு.தவநாதன் றொபேட் அவர்கள் ஈழத்து இசையுலகில் அனைவரையும் ஈர்த்து வருகின்ற முன்னணிக் கலைஞராவார். வரன்முறை தவறாத அரங்க அளிக்கையைக் கையாள்பவர். கர்நாடக இசையோடு பாரம்பரிய கிராமியக் கலைகளுக்கும் புத்துயிர் ஊட்டவேண்டும் என்று ஆர்வத்துடன் உழைத்து வருகின்றார்.



## வயலின்

அம்பலவாணர் ஜெயராமன்

மறைந்த பிரபல மிருதங்க வித்துவான் திரு.வே.அம்பலவாணர் அவர்களின் புதல்வன் ஆகிய திரு.அம்பலவாணர் ஜெயராமன் அவர்கள் நாடறிந்த புகழ்பூத்த கலைஞர். இசை, நடனம், நாடகம் போன்ற பல்துறைகளிலும் தனக்கென ஒரு தனிப்பாணியை கையாண்டு அகில இலங்கை எங்கும் வாசித்து வருபவர்.



## மிருதங்கம்

செல்வன் ருக்மிணிகாந்தன் சாரங்கன்

யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவனான செல்வன்.ருக்மிணி-காந்தன் சாரங்கன், நல்லை க.கண்ணதாசன் அவர்களை குருவாகக் கொண்டு அவரது பாணியிலே மிருதங்கம் இசைத்து வருகின்றார். சிறுவயது முதலே மிருதங்கத்தின் மீது மையல் கொண்ட இவர் பல்வேறு இசை நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் தனது மிருதங்க ஆற்றுகையைச் செய்து வருகின்றார்.



## கெஞ்சிரா

கலைமாணி பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா

பொருளியல் பட்டதாரியான பிரம்மஸ்ரீ நா.சிவசுந்தரசர்மா அவர்கள் சங்கீதரத்தினம் திரு.க.ப.சின்னராசா அவர்களின் மிருதங்க மாணவனாவார். கலை, ஆன்மீகம், ஓவியம், கட்டுரை போன்ற துறைகளிலும் ஈடுபட்டுவருகின்ற இவர் கலைமாமணி திருவாரூர் பக்தவத்சலம் அவர்களிடமும் மிருதங்கம் பயின்றவர். இலங்கை இந்தியக் கலைஞர்களின் இசைநிகழ்வுகள், மற்றும் ஒலிப்பதிவுகளில் அணிசேர் இசைக் கலைஞனாகப் பங்குபற்றுகின்ற இவர், ஓர் ஆசிரியர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கிசை கலைஞர்கள்

## முகர்சிங்



கலாவித்தகர் திரு.என்.சதீஸ்குமார்

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரியான ந.சதீஸ்குமார் அவர்கள் கலாபூஷணம் திரு.மா.சிதம்பரநாதன், நுண்கலைமாணி திரு.க.கண்ணதாஸ் ஆகியோரின் மிருதங்க மாணவர் ஆவார். வட இலங்கை சங்கீதசபையின் ஆசிரியர் தரம் நிறைவு செய்து, மிருதங்க கலாவித்தகர் பட்டம் பெற்றவர். இசையரங்குகளில் மிருதங்கம், முகர்சிங் ஆகிய இசைக்கருவி-களை வாசித்து வருகின்ற இவர் நல்லூர் பிரதேச செயலகத்தில் கள கூட்டிணைப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

## கடம்



இளஞ்சுடர் திரு.ஞானவேல் வசந்

இவர் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையில் முதலாம் வருட மாணவராவார். திரு.ஞானவேல் வசந் நல்லை க.கண்ணதாஸ் அவர்களின் அரங்கேற்றம் கண்ட ஒன்பதாவது மாணவன் ஆவார். பாரம்பரிய இசைக்குடும்பத்தில் பிறந்த இவர், சிறுவயது முதல் கலைக்கற்றலில் ஈடுபட்டு, இசையரங்குகளில் பரிமளித்து வருகின்றார். வளரும் இளங் கலைஞர்களுள் முன்னணியில் திகழும் இவர், எதிர்காலத்தில் நன்கு பிரகாசிக்கக்கூடிய கலைஞராவார்.

## தம்புரா



நுண்கலைமாணி திரு.க.ரஜீவன்

நுண்கலைமாணிப் பட்டம்பெற்ற திரு. கந்தசாமி ரஜீவன் அவர்கள் யாழ்.மத்தியகல்லூரியில் இசையாசிரியராகக் கடமைபுரிந்து வருகின்றார். அர்ப்பணிப்புடன் மாணவர்களை இசையாளர்களாக உருவாக்கி வருகின்ற திரு.க.ரஜீவன் கடந்த பல வருடங்களாக இசைக்கலையில் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என்னை இந்த அரங்கில் அடியெடுத்து வைக்கக் காரணமாக அமைந்த என் தாய், தந்தை, குரு மற்றும் எல்லாம் வல்ல இறைவனினதும் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

என் தாய் தந்தையர்க்கும் குரு இறைவனுக்கும் செய்யும் நன்றி தெரிவித்தலாகவே இன்றைய அரங்கேற்றத்தை உணர்கின்றேன்.

எனது அறியாப் பருவத்தில் இருந்தே தனது மடியில் என்னை வைத்து மேலைத்தேய ட்ரம்ஸ், கொங்கோ ட்ரம்ஸ் வாத்தியங்களை இசைக்க எனது தந்தை கற்றுக் கொடுத்தார். இதிலிருந்து எனக்குத் தாள வாத்தியக் கருவிகளில் மிகுந்த ஈடுபாடு உண்டாகியது.

நான் ஆசிரியர் திரு.நி.மதிரூபன் அவர்களிடம் இக்கலையை பயில ஆரம்பித்து, பின்னர் பிரபல மிருதங்கக் கலைஞரான திரு.நல்லை கண்ணதாஸ் அவர்களிடம் ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பயின்று வருகின்றேன்.

இவர் வடமாகாணத்தில் மட்டுமின்றி இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தனக்கென சிறப்பானதொரு இடத்தைக் கொண்டவராவார். சிறந்த மிருதங்க வித்துவானாக திகழ்கின்ற அவர், மிருதங்கக் கலையில் காட்டும் ஈடுபாடு என்னை மென்மேலும் மிருதங்கம் பயில்வதில் ஈர்ப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

எனக்குள் இருக்கும் திறமைகளை இனங்கண்டு அவற்றை வெளிக்கொண்டு வந்து இவ் அரங்கேற்றத்திற்கு வித்திட்டவர் திரு.க.கண்ணதாஸ் அவர்களே ஆவார். இவரை என் ஆசானாக பெற்றது நான் செய்த பாக்யமாக உணர்கின்றேன்.

இந்த அரங்கேற்றம் சிறப்புற நடந்தேறவும் எனக்கு நல்லாசிகளை வழங்கவும் அரங்கில் கூடியுள்ள அனைத்துப் பெரியோர்களையும் வேண்டி நிற்கின்றேன்.

ரு.சாரங்கன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமது அன்பான அழைப்பை ஏற்று செல்வன் சாரங்கன் அவர்களின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். முதற்கண் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி. இந்த வித்தைப் பயன்தரு விருட்சமாக்கி இன்றைய விழா நாயனாக்கிய பெருமைமிகு குரு நல்லை க.கண்ணதாஸ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள் பல.

தமது வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் எமது அன்பான வேண்டுதலை ஏற்று அரங்கத்தை சிறப்பித்துக் கொண்டு இருக்கும் பிரதம விருந்தினர் யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர்கள் கலாபூஷணம் இசைத் தென்றல் ம. யேசுதாஸ், தண்ணுமை வேந்தன் திரு. மா. சிதம்பரநாதன், சட்டத்தரணி திரு.எம்.ஆர். ராஜ்மோகன் ஆகிய பெரியோர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றிகள்.

நல் ஆசியுரைகளை வழங்கிய நல்லை ஆதீன ஸ்வாமிகள், ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான குருக்கள், தமிழ்நாடு, சிதம்பரம் தில்லை வாழ் அந்தணர்கள் ச.சங்கரதீக்ஷிதர் ஆகிய ஸ்வாமிகளுக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகிறோம்.

ஆரம்ப மிருதங்க ஆசான் திரு.நி.மதிரூபன் அவர்களுக்கும் அரங்கத்தை வழி நடத்தும் திரு.ச.லலீசன் அவர்களுக்கும் அரங்கேற்ற ஏற்பாடுகளுக்கு ஆலோசனை களைத் தந்துதவிய திருமதி.பாலினி கண்ணதாஸ் அவர்களுக்கும், அரங்கத்திற்கான ஒத்திகைகளின் போதும் அரங்கேற்றத்தின் போதும் தம் இசைத்திறனை விரும்பி உவந்தளித்த அரங்கக் கலைஞர்களுக்கும் அரங்கத்தைத் தந்துதவிய இலங்கை வேந்தன் திரு.இராதா-கிருஷ்ணன் அவர்களுக்கும், ஒளி, ஒலி, வீடியோ, புகைப்படம், மேடை அலங்கார நிபுணர் களுக்கும், அரங்கேற்ற மலர், அழைப்பிதழ் ஆகியவற்றை அழகுற அமைத்த அச்சகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

செல்வன். சாரங்கன் மிருதங்க கலை பயின்ற யாழ் ஏழிசை மிருதங்க நர்த்தனாலய நிர்வாகிகளுக்கும், நடேஸ்வராலயா இசை நிறுவனத்தினருக்கும் எமது அழைப்பை ஏற்று வருகை தந்த கலைஞர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள், நலன் விரும்பிகள் யாவர்க்கும் எமது குடும்பத்தினரின் மனமார்ந்த நன்றிகள்.

**திரு. திருமதி. வ. ருக்மிணிகாந்தன் - நகுலேஸ்வரி குடும்பத்தினர்.**
**திரு. ஜி.எஸ்.வசந்த குலசிங்கம் குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MATHI COLOURS
Nallur 021 2229285
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org